Registered No. M. 2830 "SIDDHANTHAM"

Vol. 41 — No. 9

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 41 | கீலக புரட்டாசி 1968 செப்டம்பர் | இதழ்

உள்ளுறை

உள்ளுறை	பக்கம்
திருமுக்கால் ...	149
திருவரசிலி ...	254
திருக்குறளில் உயிருண்மை ...	258
என்ன புண்ணியம் செய்தனை ...	264
தவநெறி ...	271
பொன்மொழிகள் ...	276
காழிக்கண்ணுடைய வள்ளலார் ...	278

இதழாசிரியர் : மு. அருணாசலம், எம். ஏ.,

துணையிதழாசிரியர் : வித்துவான் அம்பை. இரா. சங்கரன்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,

12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4

சமாஜச் செயற்குழுக்கூட்ட அறிவிப்பு

சென்னை மயிலாப்பூர் குருநாத முதலி தெருவிலுள்ள சமாஜ அலுவலகத்தில் 29-9-68 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்குச் சமாஜச் செயற்குழுக் கூட்டம் நிகழும். அவ் வமயம் வரவு செலவுக் கணக்கு, ஆண்டுவிழா, சமாஜத்தேர்வு கள் ஆயபிற இன்றியமையாச் செய்திகள் பற்றி முடிவெடுக் கப்பெறும். செயற்குழு வுறுப்பினர்கள் யாவரும் வந்து கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பெறுகின்றனர்.

(செயலாளர்)

பிற செய்திகள்

வேலூர் சுல்தான்பேட்டை (சேலம்) திருஞான சம்பந்தர் மடாலயத்தில் கண்டர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் வித்து வான் அ. வைத்தியலிங்கம் எம். ஏ. அவர்கள் 27-5-67 முதல் நாள்தோறும் தொடர்ந்து பெரிய புராண விரிவுரை யாற்றி வருகிறார்கள். அதன் நிறைவு விழா 8-8-68 வியா ழன் அன்று திரு M. பரிமளக் கண்டர் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. சொற்பொழிவாளர் அவர்களுக்கு பொன்பட் டாடை, செம்பொன் அணி, பாராட்டுரை முதலிய பல சிறப் புகள் அன்பர்களால் அன்று செய்யப்பெற்றன.

அண்மையில் தமிழக அரசு பொது அலுவலக இடங் களில் உள்ள சுவாமி உருவம், மகான்களின் உருவம் முதலிய வற்றை அகற்ற உத்திரவுயிட்டிருப்பது யாவரும் தெரிந்ததே. அவ்வுத்தரவை நீக்குவான் வேண்டிச் சிதம்பரம் கீழரதவீதி R. M. S. பாடசாலைக் கட்டிடத்தில் பிரம்மஸ்ரீ சுவாண வெங்க டேச தீக்ஷிதர் அவர்கள் தலைமையில் 31-7-68 புதன் மாலை 5-30 மணிக்கு ஒரு வேண்டுகோட் கூட்டம் நிகழ்ந்தது. திரு. டாக்டர் K. ரங்கசாமிப் பிள்ளை, தர்மபூஷணம் S. இரத் தினசாமி செட்டியார், R. கனகசபைப் பிள்ளை M. L. A. S. கோவிந்தராஜம் பிள்ளை முதலிய பலர் பேசினர்.

Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 41	கீலக ௵ புரட்டாசி 1968 செப்டம்பர்	இதழ் 9

திருமுக்கால்

(ஆசிரியர்)

பண்டைக் காலத்தில் மிகப் பலவான யாப்பமைதிகளும் சந்த அமைதிகளும் தமிழில் பயின்றன என்று யாப்பருங் கலம் போன்ற யாப்பிலக்கண நூல்களால் நாம் அறிகிறோம். சிலப்பதிகாரத்தில் பலவகைவரிப் பாடல்கள் உள்ளன. இவற்றின் இலக்கணம் பிற்கால ஆட்சியில் இல்லை. இவ்வாறு உள்ள பாடல் வகைகள் பல.

திருஞான சம்பந்தர் தேவாரத்தில் இத்தகைய அமைதிகள் மிகப்பல காண்கிறோம். திருவிராகம், எழுகூற்றிருக்கை, ஏகபாதம், கோமூத்திரி, தாளச்சதி, மாலைமாற்று, திருமுக்கால் என்பன சில. அவர் காலத்தில் இவ்வகை யாப்பமைதிகள் வழக்கில் இருந்தன. ஆகவே அவர் பாடியபோது, தாமும் அவ்வமைதிகளைத் தம் பாடல்களில் அமைத்துப் பாடினார். அவற்றுட் பல பிற்கால வழக்கில் காணப்படவில்லை. திருவெழுகூற்றிருக்கை, திருமங்கையாழ்வார், நக்கீரதேவ நாயனார் அருணகிரிநாதர் முதலி

யோரால் ஆளப்பெற்றிருக்கிறது. மாலைமாற்று சம்பந்தருக்குப் பிறகு சோழவந்தான் வித்துவான் அரசஞ் சண்முகனாரால் தான் பாடப்பெற்றது என்று அறிகிறோம். (இலக்கண உரைகளுள் ஒன்றிரண்டு பாடல்கள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.)

இவ்வகை யாப்பு அல்லது பிரபந்தங்களின் இலக்கண அமைதிகூட இன்று அறிவதற்கியலாதபடி போய்விட்டது. இப்படிப் போனவற்றுள் திருமுக்கால் என்பதும் ஒன்று போலும். திருமுக்கால் என்ற தலைப்புடன், சம்பந்தர் மூன்றாம் திருமுறையில் ஆறு பதிகங்கள் (94-99) பாடியிருக்கிறார். இவை சாதாரிப் பண்ணில் அமைந்தவை; வெங்குரு, இன்னம்பர், நெல்வெண்ணெய், சிறுகுடி, வீழிமிழலை, முதுகுன்றம் ஆகிய ஆறு தலங்களுக்கு உரியவை. சில பதிகங்களில் பாடல்கள் குறைவாகவுள்ளன. வெங்குருப் பதிகத்தில் சம்பந்தர் வழக்கமாய்ப் பாடுகின்ற இராவணன், அயன்மால் தேடியமை, சமணர் ஆகிய குறிப்புக்கள் காணப்படவில்லை.

இப்பாடல்கள் யாவும், முதலடியும் மூன்றாமடியும் நான்கு சீருடையனவாயும் இரண்டாமடியும் நான்காமடியும் மூன்று சீருடையனவாயும் அமைந்துள்ளன. இவ்வாறு ஈரடிகள் முக்கால் அளவினவாக அமைந்துள்ளபடியால் இந்த யாப்பு, திருமுக்கால் எனப் பெயர் பெற்றது போலும்.

இவ்வாறு பதிகங்களிலும் சம்பந்தர் பாடல்தோறும், முதல் இரண்டடிகளில் சிவபெருமானை அரவசைத்தீரே, சடைமுடியீரே என்பன போன்ற தொடர்களால் விளித்து, பின்னிரண்டடிகளின் 'உமதொழுகழல் என்னவல்லார் இடர் இலரே' என்பது போன்ற கருத்தை அமைத்து முடிக்கிறார். இரண்டாமடியிலுள்ள மூன்று சீர்களும் மூன்றாமடியில் மடக்காக வருகின்றன.

மற்றொரு சிறப்பான இயல்பு பதிகந்தோறும் அமைந்திருப்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. ஒரு பதிகம்

ஏந்தத் தலத்துக்குரியதோ அந்தப் பெயரின் முதலெழுத்துடன் மோனை படுமாறு, பதிகத்தின் ஒவ்வொரு பாடலின் முதல்வரி முதலெழுத்துக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதை விளக்கிக் காட்டுவோம். முதல் பதிகம் திருவெங்குரு, முதல் எழுத்து-வெ. இப்பதிகம் பத்துப் பாடல்கள் உடையது. பல சுருதி கூறும் 11 ஆம் பாடல் இதில் காணப்படவில்லை. பத்துப் பாடல்களின் முதல் எழுத்துக்களும் வெ என்ற எழுத்தோடு மோனை படுமாறு அமைந்துள்ளன. விண்ணவர், வேதியர், விண்டு, விளங்கு, மிக்கவர், வெந்த, விழவு, வித்தக, மேவலர், விளா என்ற முதற் சொற்களைக் காண்க.

இரண்டாம் பதிகம் திரு இன்னம்பர்; முதல் எழுத்து இ. பாடல்கள் பதினொன்றும் முறையே எண், யாழ், இள, இடி, இமையவர், எண், எழில், ஏத்த, இயல், ஏர், எடு, என இகரத்தின் மோனையிலேயே அமைந்துள்ளமை காண்க. மூன்றும் பதிகம் திருவெண்ணெய்; முதலெழுத்து நெ. முதல் பாடல் மட்டும் நல்வெணெய் என்றுள்ளது. ஏனையவை நிச்சலும், நீரை, நீர், நீடு, நெற்றி, நிறையவர், நெருக்கிய, நிறை, நீக்கிய, நிலம்; யாவும் நெ என்ற எழுத்துக்கு மோனை.

இங்ஙனமே ஐந்தாம் பதிகம் திருவீழிமிழலை; வீ-மோனை. நான்காம் பதிகம் திருச்சிறுகுடி; சி-மோனை. ஆறும் பதிகம் திருமுதுகுன்றம்-மு- மோனை.

இத்தனையும் பார்த்தபின் மூன்றும் பதிகத்தின் முதல் பாட்டு மட்டும் இந்த இலக்கணத்துக்கு ஒவ்வாமல் இருப்பது தெரிகிறது. எல்லாப் பாடல்களும் அவ்வத் தலைப் பெயருக்கு மோனையாகத் தொடங்க, இவ்வொரு பாட்டு மட்டும், நல்வெண்ணெய் என்ற பெயருடன் மோனைபடும் படியிராமல் நல்வெணணய் என்று காணப்படுகிறது. "நல்வெணெய் விழுது பெய் தாடுதிர் நாள்தோறும்" என்பது முதலடி! இதனுள் நல் நாள் என்ற வழிமோனை அமைந்திருப்பது உண்மை. ஆயினும், ஆறுபதிகங்களிலும் உள்ள

அத்தனைப் பாடல்களிலும் அமைந்துள்ள பொது அமைப்பை ஊன்றி நோக்கும்போது, இவ்வொரு பாடலை மட்டும் விலக்காகக் கொள்ள நியாயமில்லை. ஆகவே இதன் முதல் தொடரும் நெல்வெண்ணெய் என்றே இருக்கத் தக்கது என்று கருதலாம். நாள்தோறும் என்பதற்கு மோனையாக அமையும்படி நெல் என்ற சொல்லின் கொம்பு விடப்பட்டு, நல் ஆயிற்றென்றோ, பொருள் அமைதியை நோக்கி இவ்வாறு மாற்றப்பெற்றதென்றோ, கொள்ள இடமுண்டு; இத்தலத்தில் சுவாமி பெயர் வெண்ணெயப்பர். "நல்ல வெண்ணிய நெய் பெய்து ஆடுகின்றீர்" என்று முதல் தொடர் இயல்பாகப் பொருள் படுகின்றது; நெல் என்று கூறும்போது இவ்வாறு பொருள் படவில்லை; நெல் என்பது உணவு வகைக்குரிய பொதுப் பெயர் என்று கொள்ளுமாறு திரிகடுகம் 80 ஆம் பாடலில் 'நெல்லுண்டனெஞ் சிறிதோர்நோய்' என ஓர் ஆட்சி உள்ளது. இது கொண்டு பார்த்தால், 'நெல்வெண்ணெய்" என்பது உண்ணத்தக்க வெண்-நெய் என்று பொருளாகும், இங்ஙனமாயின், நெல்வெண்ணெய் என்று தொடங்குவது பொருத்தமே.

ஆனால் நாம் பார்த்த அடங்கன் முறை ஏட்டுப் பிரதிகளில் நல் வெண்ணெய் என்றே பாடம் உள்ளது.

இதுகாறும் கூறியவற்றால், திருமுக்கால் என்பது ஒரு வகையான யாப்பமைதி, நாலடி கொண்ட பாட்டில் இரண்டு, நான்கு, அடிகள் மட்டும் முச்சீராய் வரும், இரண்டாமடி மடங்கி மூன்றும் அடியில் வரும், முதல் இரு அடிகள் விளியாகவும் பின்னிரு அடிகள் இயல்மொழி வாழ்த்து முதலான இயல்பு பெற்றுவரும், பாடல் ஒவ்வொன்றின முதல் எழுத்து, பொருட் பெயரின் முதலெழுத்தோடு மோனைகொண்டு வரும் என அறிகிறோம்; இது திருமுக்காலின் இலக்கணம்; வேறெங்கும் இது காணப்படவில்லை.

இதுபற்றித் தணிகைமணி அவர்களிடம் வினவிய போது, அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். 'கால்

என்றால் பிரிவு என்பது பொருள். முக்கால் மூன்று பிரி வுடையது. ஒவ்வொரு பாடலும் மூன்று பிரிவாய் உள் ளது. முதற்பிரிவு இறைவனை அழைப்பது: இது சேய்மை விளி. இரண்டாவது அண்மைவிளி. மூன்றாவது செவி யறிவுறூஉ; தான் சொல்லவேண்டிய வேண்டுகோளை உணர்த்துதல். உதாரணமாக 97 ஆம் பதிகம்: முதற் பாடல். திடமலி மதிலணி சிறுகுடிமேவிய படமலி அரவுடையீரே முதற்பிரிவு. படமலி யரவுடையீர்-இரண் டாம் பிரிவு. உமைப் பணிபவர் அடைவதும் அமருலகது வே-மூன்றும் பிரிவு. மோனை அமைந்திருப்பது, அலங்கார மேயன்றி, திருமுக்காலுக்கு இலக்கணமென்று தோன்ற வில்லை" என்று அவர்கள் எழுதினர்கள்.

சில பாடல்கள் நாற்பகுதியாயும் உள்ளன. 98-திரு வீழிமிழலைப் பதிகம் முழுமையும் இவ்வாறு உள்ளது. (பாடல் 9 தவிர) மேலும் 96 ஆம் பதிகம் திருநெல்வெண் ணெய்-பாடல் 1 உம் இவ்வாறு உள்ளது. இவற்றைப் பார்க் கும்போது, முக்கால் மூன்று பிரிவு எனப் பொருள் சொல் வது இடர்ப்படுகிறது

அப்பர் சுவாமிகள் திருநேரிசைப் பதிகம் கயிலாயம் (47) 'கனகமா வயிரமுந்து' என்று தொடங்குவது, 10 பாடல்களும் க என்ற எழுத்திலேயே தொடங்குவதும் இங்கு அறியத்தக்கது; கயிலாயம் என்ற தலப் பெயரின் முதலெழுத்தோடு இவை மோனை பெற்று உள்ளன.

இவ்வாறே பிற்காலத்தில் அருணகிரிநாதர் கந்தரந் தாதிப் பாடல்கள் நூறும் சி-சீ-செ-சே தி-தீ-தெ-தே என்ற எழுத்துக்களில் ஒன்றில் தொடங்குகின்றன; இவ் வந்தாதியில் அதிகம் குறிப்பிட்ட தலம் செந்தில்; இந்தப் பெயரின் முதலெழுத்தோடு அவ்வெழுத்துக்கள் மோனை பெற்று வருகின்றன. ஆதலால் கந்தரந்தாதி, செந்திலந் தாதி என்றும் கருதத் தக்கது.

மற்றொரு நூலும் இங்குக் குறிப்பிடலாம். அசதிக் கோவை என்ற ஒரு நூல் அவ்வையார் பாடினர் என்றறி

கிறோம், இதன் காலம் 12ஆம் நூற்றுண்டு. இந்நூல் இன்று கிடைக்கவில்லை. எட்டுப் பாடல்களே கிடைக்கின்றன. கிடைக்கின்ற எல்லாப் பாடல்களும் அ, ஆ என்ற எழுத்துக்களில் ஒன்றைக் கொண்டே தொடங்குகின்றன. நூல் முழுதும் இங்ஙனமே இருந்திருக்கக்கூடும். இங்கும் பாட்டுடைத் தலைவனுகிய அசதியின் பெயரோடு ஒவ்வொரு பாடலின் முதல் எழுத்தும் மோனைபட அமைந்திருக்கும் இயல்பைக் காண்கிறோம்.

திருவரசிலி

(வித்துவான் பு. மா. ஜயசெந்தில் நாதன், காஞ்சிபுரம்)

தோற்றுவாய்

உலகில் தெய்வ நெறியாக விளங்குகின்ற சைவநெறியைப் பரப்பி வாழ்ந்து வழிகாட்டிய நால்வர் பெருமக்களுள் முதலாவதாக வைத்து எண்ணப்படுபவர் சீகாழிப் பதியிலே அவதரித்த திருஞான சம்பந்த சுவாமிகள் ஆவர். 'நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன்' என்று போற்றப் பெறும் இப்பெரியார் பதினுறு ஆண்டுகளே வாழ்ந்தரெனினும் அக்காலத்து அவர் ஆற்றிய அரும் அருட்பணிகள் அளவிலடங்கா. இப்பெருமானின் அருட்பாடல்களைப் பெற்றுயர்ந்து விளங்கும் தமிழ் நாட்டுத் தலங்கள் பல. இறையிடத்து மெய்ஞ்ஞானப் பாலுண்டு, தலங்கள் தோறும் சென்று இறைவனைத் தரிசித்துப் பாடல்கள் பாடி, பல அற்புதங்களை நிகழ்த்திச் சைவநெறி தழைத்தோங்கச் செய்தார். இவர் தொண்டினைப் பின்வந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் "நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞான சம்பந்தன்" எனப்போற்றிப் புகழ்வராயினுர். இத்தகு பெருமையுடைய திருஞானசம்பந்தரால் பாடப்பட்ட தலங்களுள் ஒன்றுக விளங்குவது 'திருவரசிலி' என்னுந் தலமாகும்.

இடம்

இத்தலம் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் திண்டிவனம் தாலுக்காவில் உள்ளது. இன்று மக்கள் வழக்கில் 'ஒழிந்தியாப்பட்டு' என வழங்கப்பட்டு வருகிறது. இப்பெயரே அப்பகுதியில் அனைவருக்கும் தெரியும். திருமுறை ஞானமுள்ளோரே திருவரசிலி என்னும் பெயரை அறிவர். இவ்வூர் திண்டிவனத்திலிருந்து கிளியனூர் வழியாகப் புதுவை செல்லும் சாலையில் 15 வது கல்லில் உள்ளது. இவ்வூர்க்குக் கிழக்கில் 2 கல் தொலைவில் பாடல்பெற்ற தலமான திரு இரும்பை மாகாளம் உள்ளது. இவ்விரண்டும் பாடல்பெற்ற திருப்பதிகளாம்.

திருக்கோயில்

இறைவன் அரச மரத்தைத் தனக்கு 'இல்'லாகக் கொண்டமையால் இப்பெயர் பெற்றது. திரு என்பது சிறப்பு அடைமொழி. இங்கு எழுந்தருளியுள்ள இறைவனின் திருப்பெயர் அரசிலிநாதர். இறைவியின் திருப்பெயர் பெரிய நாயகி. இத்தலம் பற்றிய கல்வெட்டுக்களில் 'திருஅரசிலி ஆளுடையார்' எனத் திருப்பெயர் குறிக்கப்பட்டுள்ளது, இங்குள்ள தீர்த்தம் அரசடித் தீர்த்தம்,

திருஞான சம்பந்தர் அச்சிறுபாக்கம் முதலான தலங்களைத் தரிசித்துப் பின் ஆறும் மலையும் கடந்து அரசிலியை அடைந்து பெருமானைத் தரிசித்து "அடிகளுக்கு இடம் அரசிலியே" என்னும் ஈற்றினைக் கொண்டதாக 10 பாடல்களைப் பாடியுள்ளார்,

இதோ முதற்பாடல்—

"பாடல் வண்டறை கொன்றை பான்மதி பாய்புனல் கங்கை
கோடல் கூவிள மாலை மத்தமும் செஞ்சடைக் குலாவி
வாடல் வெண்தலை மாலை மருவிட வல்லியந் தோல்மேல்
ஆடல் மாசுணம் அசைத்த அடிகளுக்கு இடம் அரசிலியே"

இவை இரண்டாம் திருமுறையில் இடம் பெற்றுள்ளன. இது ஞான சம்பந்தர் தொண்டை நாட்டிற்குச் சென்று மீண்டபோது நிகழ்ந்த நிகழ்ச்சியாகும்.

"ஏறணிந்த வெல் கொடியார் இனிதமர்ந்த பதிபிறவும்
நீறணிந்த திருத்தொண்டர் எதிர்கொள்ள நேர்ந்திறைஞ்சி
வேறுபல நதிகானம் கடந்தருளி விரிசடையில்
ஆறணிந்தார் மகிழ்ந்த திரு அரசிலியை வந்தடைந்தார்"

(பெரிய புராணம்)

கல்வெட்டுக்கள்

இத்தலம் பற்றிய கல்வெட்டுக்கள் ஐந்து கிடைத்துள்ளன. அவை அரசியலாரால் படியெடுக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுக்களுள் விக்கிரம சோழ தேவர், குலோத்துங்க சோழ தேவர் ஆகிய இருவர் பெயரும் குறிக்கப்பட்டுள்ளன. விக்கிரம சோழ தேவரது 6 வது ஆட்சியாண்டில் இத்தலம் "ஜயங்கொண்ட சோழ மண்டலத்து ஓய்மானுடான விஜய ராஜேந்திர சோழவள நாட்டுப் பெருவேம்பூர் நாட்டுத் தேவதானம் திருவரசிலி" எனவும்; 12 வது ஆட்சியாண்டில் "ஓய்மானுட்டுத் திருவரசிலி" எனவும் குறிக்கப்பட்டுள்ளது.

குலோத்துங்கனின் 5 வது ஆட்சியாண்டினைச் சேர்ந்த ஒரு கல்வெட்டில் "ஜயங்கொண்ட சோழ மண்டலத்து ஓய்மானுடான விஜயராகவேந்திர சோழவள நாட்டுத் தனியூர்த்தானம்" எனக் குறிக்கப்பட்டுள்ளது.

அடுத்துத் திருவிரும்பை மாகாளத்திலுள்ள ஒரு கல்வெட்டும் இத்தலம் பற்றிய குறிப்பு உடையதாக இருக்கிறது. இது திரிபுவன சக்கரவர்த்தி ஸ்ரீ விக்கிரம பாண்டிய தேவரின் 2 வது ஆட்சியாண்டில் பொறிக்கப் பெற்றதாகும். அக்கல்வெட்டில் இவ்வூர் "ஜயங்கொண்ட சோழ மண்டலத்து மாத்தூர் நாட்டு ஒழுகறையான குலோத்துங்க சோழ நல்லூர் திருவரசிலி உடையார் ஆலால சுந்தரனூர்" எனக் குறிக்கப்பட்டுள்ளது. ஒழுகறை என்னும் பெயர் பிற்காலத்து ஒழிந்தியாப்பட்டு என மாறியதோ என்று கருதுகின்றனர்.

சிறப்பு

சிறுபாணாற்றுப் படைநூலின் தலைவனான நல்லியக் கோடனும் ஓய்மா நாட்டினன். அரசிலியும் ஓய்மா நாட்

டைச் சேர்ந்தது. மேலும் இத்தலம் வாமதேவ முனிவர் பூசித்துப் பேறுபெற்ற சிறப்பினையுடையது. தற்போதைய நமது ஜகத்குரு காஞ்சி காமகோடிபீடம் ஸ்ரீலஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் அவர்கள் தமது யாத்திரையின்போது இத்தலத்துத்தங்கி வழிபட்டனர். அந்நாள் முதல் அத்தலமும் அரசும் செழித்து வளர்ந்து விளங்குகின்றன. காஞ்சி தொண்டைமண்டலாதீனம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களும் அண்மையில் இத்தலத்திற்குச் சென்று வழிபட்டபோது நாற்பதுக்கும் மேற்பட்டோர்க்குத் தீக்ஷை செய்து வைத்தருளினர்.

திருமடம்

இத்தலத்திற் திருக்கோயிலுக்கு அருகில் திருஞான சம்பந்தர் திருமடம் ஒன்று இக்காலத்தில் சிறப்பாக அமைந்துள்ளது. இக்கோயிற் பெருவிழாவினைக்காண வருகின்ற மக்கள் தங்கவும், சொற்பொழிவுகள் நடைபெறவும் வசதியான முறையில் இத்திருமடம் அமைக்கப்பட்டுள்ளது. திருமடத்தினுள் திருஞான சம்பந்தர் ஆலயமும் உள்ளது. இம்மடத்தினைக் கட்டி உதவியுள்ளவர் இத்தலத்திற்கு அண்மையூரான காட்டரண்பாக்கத்தைச் சேர்ந்த திருவாட்டி ஜெயலட்சுமி அம்மையார் ஆவார்.

முடிவுரை

வாய்ப்புக் கிடைக்கப் பெறுவோர் ஒருமுறையாவது திருவரசிலி நாதரைத் தரிசித்து மகிழ்வு பெற வேண்டும். அவ்வாறு செய்யின் அது நாம் வானுலகில் வைகலும் மகிழ்ந்திருக்கத் துணைபுரியும்.

"அல்லி நீள்வயல் சூழ்ந்த அரசிலி அடிகளைக் காழி
நல்ல ஞானசம்பந்தன் நற்றமிழ் பத்திவை நாளும்
சொல்லவல்லவர் தம்மைச் சூழ்ந்து அமரர் தொழுதேத்த
வல்ல வானுலகு எய்திவைகலும் மகிழ்ந்திருப்பாரே."

(திருஞான தேவா, இரண். திருமுறை)

திருக்குறளில் உயிருண்மை

(கா. சிவகாமி எம். ஏ., உதகை)

"பிறவிப் பெருங்கடல்" என்று கடவுள் வாழ்த்துள்ளேயே கூறினமையின் மூலம், பிறவி பலவென்றும், அப்பிறவிகள்தோறும் உடம்புகளோடு கூடியிருப்பது, வாலறிவனுகிய இறைவினின்றும் வேருன சிற்றறிவான உயிரென்றும் குறிப்பால் விளக்கிப் போந்தார் திருவள்ளுவர். உயிர் அல்லது ஆன்மாவைப்பற்றி,

"இந்தவுடல் அறிவு அறியாமையும் நீயில்லை
யாதொன்று பற்றின் அதன்இயல்பாய் நின்று
பந்தமெனும் பளிங்கனைய சித்துநீ"

எனத்தாயுமானுர் விளக்கிச் செல்லுகின்ருர். இதனையே மணிவாசகர், "1 கல்லாத புல்லறிவு' எனக் கூறுகின்ருர். இக்கல்லாத புல்லறிவு எத்தகையது? விடையாக, "2 நில்லாதவற்றை நிலையின என்றுணரும் புல்லறிவு" எனத் திருவள்ளுவர் கூறுகின்ருர் காரிட்ட ஆணவக் கருவறையில் அறிவற்ற கண்ணிலாக் குழவியைப்போல் கட்டுண்டு கிடக்கின்ற இப்புல்லறிவாகிய உயிர் பிறவிப் பெருங்கடலில் தத்தளிக்கின்றது. இது, அடுத்தது காட்டும் பளிங்குபோல் சார்ந்ததன் குணத்தைக் காட்டும் தன்மையது. இதனைக் கி. இலக்குமணன் அவர்கள் "3 மேகத்திலிருந்து விழும் தூய மழைத்துளி எந்த நிலத்தில் விழுகின்றதோ அந்த நிலத்தின் நிறத்தையும் தன்மைகளையும் அடைகின்றது, இதைப்போன்றதே ஆன்மாவின் இயல்பும்" என்று கூறுகின்ருர். திருவள்ளுவரும்,

நிலத்தியல்பால் நீர்திரிந் தற்ருகும் மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு4

எனக் குறிப்பினல் உணர்த்திச் சென்ருர்.

---

1. திருவாசகம்–கண்ட பத்து-4
2. குறள்–331
3. இந்திய தத்துவ ஞானம்-பக்-374
4. குறள்–452

எத்துணைதான் இவ்வுலகியலுக்கு அறங்கூறி நெறிப் படுத்த முயன்றாலும், வள்ளுவரின் நோக்கமென்னவோ, இந்நிலையில்லா உலகப் பிறப்பை ஒழித்து நிலையான வால நிலைவப் பற்றிக்கொள்ளவேண்டும் என்பதுதான். எனவே தான் அவர், "1 பிறப்பறுக்கல் உற்றார்க்கு உடம்பும்மிகை" "2 தலைப்பட்டார் தீரத்துறந்தார்," "3 பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்" என்று மிகவும் தெளிவாக வற்புறுத்துகின்றார்.

மாயையின் வயப்பட்ட உயிர் நிலையில்லாத உடம்பு முதலியவற்றை நிலையென்று மயங்குகின்றது. தேவைக்காகப் பறவைகள் கூடு கட்டிக்கொள்ளுகின்றன. இதுபோல் உயிரும் ஆணவத்தை ஒழித்து வீடெய்த வேண்டும்—பற்றற்று, பறவைபோல் பேரானந்தமாகிய வானிற் பறக்க வேண்டும் என்ற காரணத்திற்காக உடலைப் பெறுகின்றது. இருவினையால் ஏற்படும் பிறவி நோயை அனுபவித்து முடித்தவுடன் உடல் கெடும்படி ஆன்மா பறந்துவிடுகின்றது. திருவள்ளுவர் அழகிய எடுத்துக்காட்டுடன் இதை விளக்குகின்றார்.

" குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே
உடம்பொடு உயிரிடை நட்பு"4

கருவுற்ற பறவை, முட்டையிட்டுக் குஞ்சாக்கி அவை பறக்கும் பருவம் எய்தும்வரை பயன்படுத்தக் கூடுகட்டுகின்றது. *பயன் முடிந்தபிறகோ அக்கூடு அழியும்வண்ணம் விடுத்துச் செல்லுகின்றது. பிறகு இன்னொரு முறை கருவுற்றபோழ்து அங்ஙனமே திரும்பவும் செய்கின்றது. இது

---

1. குறள்-345
2. குறள்-348
3. குறள்–349
4. குறள்-338

*"கூடுகட்டி முட்டையிட்டுக் கொண்டிருந்தவாறுபோல்"– சிவ வாக்கியர்

போலவே ஆன்மாவும் இருவினையாகிற கன்மத்தை அனுபவிக்க உலகில் உடம்பாகிய கூட்டைப் பெறுகின்றது. அவ்வுடம்பினிடத்தேயிருந்து சென்ற பிறப்பிற்பட்ட கடனை அடைப்பதோடு வரும் பிறவிக்கும் கடன் சேர்த்துக்கொண்டு உடம்பினின்றும் நீங்குகின்றது. ஒரு பிறவியில் ஆன்மா பெறுகின்ற உடலுக்கு அப்பிறவிக்கு முன்போ அல்லது பின்போ அவ்வான்மாவிடம் எவ்விதத் தொடர்புமில்லை. பிறப்புக்கு முன்பும், பிறவியை அனுபவித்த பின்பும், அப் பிறப்பை அனுபவிக்க ஏதுவாயிருந்த உடலுக்கும் ஆன்மா விற்கும் எவ்விதத் தொடர்பும் இன்மையை உணர்ந்தே வள்ளுவர், உடம்பொடு உயிருக்கு இருக்கின்ற நட்பு, இடை நட்பு–அதாவது இடையிலே வந்த உறவு என்று கூறினார். எனவே இங்ஙனம் இடையிற் சில காலத்திற்கு உறவாக இருக்கும் "உடம்பும், மிகை 1" என்றுணர்ந்து "தீரத் துறக்க வேண்டும். அங்ஙனம் துறந்து 'பற்றற்றான்' பற்றினைப் பற்றத் தலைப்படவேண்டும். அப்படித் தலைப்படா மல் மாயையாகிய மயக்கங்காரணமாக அறிவு விளக்கமின்றிப் பந்தபாசங்களாகிய உலகியல் வலையிலே வீழ்ந்து கிடப் பவர்கள் பிறவிப் பெருங்கடலைக்' கடக்கத் தெம்பில்லாத வரே! இவற்றை அறிவுறுத்தவே,

"2தலைப்பட்டார் தீரத்துரந்தார் மயங்கி
வலைபட்டார் மற்றையவர்" என்றார் வள்ளுவர்'

இக்குறளின் ஆழ்ந்த பொருளுண்மையை நோக்கியே உமாபதி சிவனார் தமது நெஞ்சு விடுதூதினுள்,

"உன்னை ஒழிய உறவில்லை என்னுமது
தன்னை அறிவை தனியறிவை—முன்னந்
தலைப்பட்டார் தீரத்துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றைய வரென்று –நிலைத்தமிழின்
தெய்வப் புலமைத் திருவள்ளுவர் உரைத்த
மெய்வைத்த சொல்லை......"3

என எடுத்தாண்டிருக்கின்றார்.

---

1. குறள்-345
2. குறள்-348
3. நெஞ்சுவிடுதூது–வரிகள்–21-26

"ஆன்மாவின் இயல்புகளில் ஒன்று அது ஒருபோதும் தானாகவே தனித்து நிற்பதில்லை. எப்போதும் ஏதாவது ஒன்றைச் சார்ந்தே நிற்கும். பெத்த நிலையில் அதாவது கட்டுண்ட நிலையில் ஆணவத்தைச் சார்ந்து நிற்கும். முத்தி நிலையில் அனுபவித்தனவும் பிறந்த உடம்பான் அதாவது தளை நீங்கிய நிலையில் இறைவனைச் சார்ந்து நிற்கும்." 1 இதனை உணர்த்தவே வள்ளுவனாரும்,

"சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்"2 என்றார்.

'சார்புணர்தலாவது இறையை உணர்தலாம். இதற்குப் பரிமேலழகர், "எல்லாப் பொருட்கும் சார்பாய செம்பொருள்" (செம்பொருளாவது சிவம்) 3 என்றார். காளிங்கர் "தனக்கு முத்திச் சார்வாம் முதல்வன்" என்று உரை செய்தார். இனிச் "சார்பு கெட" என்றது 'பெத்தநிலை' அதாவது ஆணவமலம் கெட என்றதாம். இங்ஙனம் தான் சார வேண்டிய செம்பொருளாகிய இறையைச் சார்ந்து, தன்னைச் சார்ந்த மலமாயைகளை ஒழித்து நின்றால், அம்மாயை மலங்களினால் சாரக் கடவனவாய துன்பங்கள் நீங்கும். அத்துன்பங்களாவன, "பிறப்பு அநாதியாய் வருதலின் உயிரான் அளவின்றி ஈட்டப்பட்ட வினைகளின் பயன்களுள் இறந்த உடம்புகளான் முகந்து நின்றனவும் ஒழியப் பின்னும் அனுபவிக்கக் கடவன வாய்க்கிடந்தன" என்பர் பரிமேலழகர்.

இனிக் "கேவலாவத்தையில்4 ஆன்மாவுக்கு அறிவே கிடையாது சகலாவத்தையில்5 தனுகரணங்களின் துணையி

---

1. இந்திய தத்துவ ஞானம்-பக்-374
2. குறள்-359
3. செம்பொருள் என்பது சிவம் என முன்பே இக்கட்டுரையில் ஆய்ந்தது.
4. கேவலாவத்தையாவது ஆன்மா ஆணவத்தோடு சேர்ந்த நிலை.
5. சகலாவத்தையாவது ஆன்மா ஆணவம், கன்மம், மாயை ஆகிய சகல மலங்களோடும் கூடியநிலை.

ஞல் ஆன்மா ஒரு சிறிது அறிவைப் பெற்றபோதும் அந்த அறிவு பூரண அறிவு ஆகாது. அந்த அறிவால் நிலையற்ற பொருள்களை, அதாவது அசத்துப் பொருள்களை மட்டுமே அறிய முடியும்.1 எனவே இதுவும் தெளிவான அறிவன்று இது ஒரு மயக்கமான நிலை. நிலையற்றனவும், துன்பத்தைத் தருவனவுமாகிய உலக போகங்களை நிலையுள்ளன எனவும், இன்பம் தருவன எனவும் கருதி மயங்கி நிற்கும் ஒரு மயக்க நிலை.2 கேவலாவத்தையை இருள் நிலையெனக் கொண்டால் சகலாவத்தையை மருள் நிலையெனக் கொள்ளலாம்'' என்பது சைவர் கொள்கை.3 இதுவே திருவள்ளுவர் கொள்கையுமா கும். எனவே அவர்,

" இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு"4 என்றார்.

மருள் நிலை உலகியலில் ஏற்படுகின்றது. எனவே இவ் இவ்வுலகியல் மயக்கம் அற்று, பிறவியின் பயனுணர்ந்து, "மற்றீண்டுவாரா" நெறிகண்ட, 'மாசறு' காட்சியாளர், இருள் நிலையறப் பிறவிப் பேற்றினை அடைவர். அதாவது சுத்தாவத்தை5 நிலையில் ஆன்மா 'முத்தி'யடைதலாம். இதனை 'அருள் இல்லார்க்கு அவ்வுலகமில்லை''6 என எதிர் மறையாற் குறித்தார் வள்ளுவர்.

இங்ஙனம் ஆன்மாவின் மூன்று அவத்தைகளும் வள்ளுவ ரால் குறிக்கப்பட்டன. குறிப்பிட்ட இச்சொற்கள் அவரால் கையாளப்படவில்லையாயினும் அவற்றிற்கிடான தமிழ்ச் சொற்களைக் கையாளுகின்றார். மெய்கண்ட சாத்திரங்களிற் கூறுகின்றபடி தத்துவ அமைப்பு முறையில் 'சித்தாந்தம்'

---

1. குறள்-331
2. குறள்-348
3. இந்திய தத்துவ ஞானம்-பக்-379
4. குறள்-352
5. அருள்நிலை
6. குறள்-247

திருக்குறளில் கூறப்படவில்லை என்பது உண்மை. ஆனால், 'சிவன்' என்ற சொல் சங்க காலத்தில் இடம் பெறுவிடினும் எங்ஙனம் 'சிவ'வழிபாடு இருந்ததோ அதுபோல பின்னால் நுண்மையாக ஆராய்ந்து சைவத்தை நிலைநாட்டும் திறத்தைக். கி. மு. அல்லது கி. பி. முதல் நூற்றாண்டைச் சார்ந்த திருக்குறளில் காண முடியாததுதான். எனினும் சைவத்தின் அடிப்படையுண்மைகள் 'பக்திக் காலத்தில்' பின்பற்றப்பட்டிருப்பதுபோல் திருவள்ளுவரும் பின்பற்றுகின்றார். எனவேதான் அவர் முதல் அதிகாரத்துள் 'பதி'யை வணங்கி, அடுத்து நிலையாமை, நீத்தார் பெருமை, துறவு முதலிய அதிகாரங்களுள், 'இருள்' நிலையிலிருந்து 'மருள்' நிலைக்கு வந்து, பிறவிகளில் உழன்று 'அருள்' நிலைக்காய்ப் பாடுபடும் 'பசு'வாகிய உயிரைப்பற்றிப் பேசுகின்றார். 1 இனிப் பிறவி பற்றிய கொள்கை எங்ஙனம் வள்ளுவரால் சைவத்தினின்றும் கொள்ளப்படுகின்றது என அடுத்த கட்டுரையில் ஆராய்வோம்.

---

1. 'உயிர் என்ற சொல்லை 40-க்கும் மேற்பட்ட இடங்களில் திருக்குறளில் காணலாம். 30, 31, 68, 73, 78, 80, 255, 58, 59, 60, 61, 90, 318, 22, 26, 27, 330, 34 40, 61, 778, 940, 69, 72, 1012 முதலிய பல.

——:0:——

புரட்டாசித் திங்கட் சிறப்பு நாள்கள்

5 (21-9-68) பூரம்—அருணந்தி சிவாச்சாரியார் விழா
6 (22-9-68) உத்திரம்-அருணகிரிநாதர் விழா
14 (30-9-68) ... — கலைமகள் விழா
15 (1-10-68) உத்திராடம்-ஏனாதிநாத நாயனார் விழா
17 (3-10-68) சதயம்—நரசிங்கமுனையரைய நாயனார் விழா
22 (8-10-68) அசுவணி-உருத்திரபசுபதி நாயனார் விழா
25 (11-10-68) உரோகணி—திருநாளைப் போவார் நாயனார் விழா

என்ன புண்ணியம் செய்தனை?

(நெல்லை R. S. இராமலிங்கம்)

வேதநெறி தழைத்தோங்க வந்துதித்த சம்பந்தர் திருவலஞ்சுழி இறைவனை வலம்வந்து வணங்கும்போது 'என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே!' என்னும் திருப்பதிகம் பாடினார். அறியாச் சிறு பருவத்தில் அம்பிகையின் ஞானப் பால் உண்டு 'உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ் ஞானம்' பெற்றுச் சிறந்த தமிழ்மறையைத் தலங்கள்தோறும் சென்று அருளிச் செய்து உலகமக்கள் சைவத்துறையில் ஓங்கி வாழ உயரிய நெறியை வகுத்துள்ளார் ஞாலம்புகழும் ஞான சம்பந்தர். திருவலஞ்சுழி இறைவன் முன் பாடிய திருப்பதிகத்தில் இன்பமாய் வாழஅவர் இரண்டு வழிகளைச் சிறப்பாகச் சொல்லுகிறார்.

இவ்வுலகில் இறைவனை வழிபடுவதும், அடியவருடன் இருத்தலுமே உயிர்க்கு உறுதி பயக்கும் பொருள்கள் என்றும், இவையிரண்டும் முன்வினைப் பயனாலேயே அமையும் என்றும் வேதமொடு சைவநெறி விளங்கச் செய்யும் சம்பந்தர் அருளியுள்ளார். உலகினருக்கு உபதேசித்து அருளியதுபோல், நாளும் நாதன்தாள்பணிந்து தொண்டர் களுடன் கூடியிருந்து சொல்லியவண்ணம் செய்து காட்டிய பெருமை சம்பந்தருக்கு உரியதாகும்.

திருவலஞ்சுழி இறைவனைத் தொழுது வணங்கும் போது "இவ்வையகத்தில் வலஞ்சுழி வாணனை வாயாரப் புகழ்ந்து ஏத்தியும் பாடியும் வழிபடும் அதனால் முன் பிறப் பில் நீ புரிந்துள்ள நல்வினைப் பயனிடை என்ன சிவபுண்ணி யம் செய்தனை நெஞ்சமே!" என்னும் கருத்துடன் ஆன்வழி பாட்டின் சிறப்பை அறிவிக்கும் செய்யுளை செவிக்கும் சிந்

தைக்கும் இன்பந்தரும் செய்யுளை-திருஞான சம்பந்தர் திரு வாய் மலர்ந்தருளினார்.

"என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே!
யிருங்கடல் வையத்து
முன்ன நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித்
தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னியாதரித்து ஏத்தியும் பாடியும் வழிபடும் அதனாலே!"

துன்பமே நிறைந்த உலகில் இன்பமே பெறும் நீ என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே என்று வியந்து பாடுகிறார். 'தினைத்தனையுள்ளதோர் பூவினுள் தேனுண்ணாதே, நினைத்தொறுங்காண்டொறும் பேசுந்தொறும் எப்போதும், அனைத்தெலும்பு உள்நெக ஆனந்தத்தேன் சொரியும் குனிப்புடையானுக்கே சென்றூதாய்கோத் தும்பீ!' என்று மணிவாசகர் அருளியதுபோல், "மண்ணால் பொன்னால் மங்கையரால் வரும் சிறியதோர் இன்பத்தை நாடாமல் என்றும் அழியா இன்பந்தரும் எம்பெருமான் திருவடியை நாடிச் செல்லும் மனமே நீ செய்த புண்ணியத்தின் பெருமை அளவிலாதது" என்று அறிவிக்கின்றார்.

வாழ்விலே அனுபவிக்கும் இன்பங்கள் எல்லாம் நிலையில்லாதன. ஒருகணம் இன்பம், ஒருகணம் துன்பம். இன்பத்தை நாடி துன்பத்தையே அடைகிறோம். நிலைத்த இன்பத்தை நமக்கு அளிப்பவன் இறைவன் ஒருவனே.

"புனிதன் பொற்கழல் ஈசன் எனுங்கனி
இனிது சாலவும் ஏசற் றவர்கட்கே"

என்பது நாவுக்கரசர் திருவாக்கு. எனவே இடையறாது இறைவனை வழிபட்டுவந்தால் அழியாத இன்பத்தை அடையலாம். பாவந்தீர்க்கும் பரமனை வழிபடும் பண்பும் பூர்வ புண்ணியம் இருந்தால்தான் அமையும் என்பர் பெரியோர்.

ஆகவே முற்பிறப்பில் செய்த நல்வினைப் பயனால் காவிரி நதியால் சூழப்பட்ட திருவலஞ்சுழி இறைவனை வாயாரப் புகழ்ந்து ஆதரித்து ஏத்தியும் பாடியும் வழிபடும்பேறு கிடைத்துள்ளது என்பதை நினைந்து மகிழ்ந்து கடல்சூழ்ந்த வையகத்தில் என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே' என்று புகழ்ந்து பாடி வலஞ்சுழி மேவிய வள்ளலை வணங்குகின்றார்,

இச்செய்யுளில்,

இருங்கடல் வையத்து முன்னம் நீ புரி
நல்வினைப் பயனிடை என்ன சிவ புண்ணியம் செய்தனை

என்றும்

இருங்கடல் வையத்து வலஞ்சுழி
வாணனை வாயாரப் பன்னி ஆதரித்து
ஏத்தியும் பாடியும் வழிபடும் அதனாலே என்ன
புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே

என்றும் கொள்ளும்படியாக அருளியுள்ள கவிநயம் அறிந்து மகிழ்வதற்கு உரியதாகும்.

அரிதரிது மானிடராதல் அரிது என்றபடி அரிய மானிடப் பிறவி அமைவது அரிது. அதிலும் கூன் குருடு செவிடு முதலான குறைகள் இல்லாமல் பிறத்தல் மிகவும் அரிது. பெறுதற்கரிய பிறவியை அளித்துள்ள பெருமானுக்கு நாம் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். ஏனெனில் எத்தனையோ பேர்கள் கால் இல்லாமலும், கண் இல்லாமலும் காது கேளாமலும் அவதிப்படுகிறார்கள். அந்நிலையில்லாமல், அழகிய திருமேனியை இறைவன் நமக்கு அளித்துள்ளார். இதுவும் ஓரளவு முன்செய்த புண்ணியத்தின் பலனேயாகும். ஒருவர் நினைத்தபடி பூமியில் பிறக்க முடிவதில்லை. பெற்றோர்கள் விருப்பப்படி பிள்ளைகளைப் பெற முடிகிறதா? இல்லை. அல்லது பிள்ளைகள் நினைத்தபடி பெற்றோர்களைத் தேடிக்கொள்ள முடிகிறதா? அதுவும்

இல்லை. ஏழைகள் வீட்டில் பலரும் செல்வர் வீட்டில் சிலரும் பிறப்பானேன்? எல்லோருமே இந்நாட்டு மன்னராக ஏன் பிறக்கக்கூடாது? என்பதையெல்லாம் ஆராய்ந்து பார்க்கும்போது பிறவி ஏற்படுவது நமது விருப்பப்படி அன்று என்பது புலனாகும். எனவே பிறவியை அளிப்பவன் ஒருவன் இருக்கின்றான். அவனே பிறவாயாக்கைப் பெரியோன், தேவதேவன். மேலுலக அரசாங்கத்திற்கு அவனே தலைவன். பூவுலக ஆட்சி அவன் ஆளுகைக்கும் ஆணைக்கும் உட்பட்டது. அங்கே நீதிநிர்வாகம் அணுவளவும் பிசகாமல் ஒழுங்காக நடைபெறும்! தீயவினை செய்யும் மக்களைத் தண்டிக்க அவரிடம் எமபடையுண்டு. நல்வினை செய்யும் மக்களுக்கு நற்பதவியளிக்க அங்கு ஒரு பாதுகாப்பு நிர்வாகமும் உண்டு.

முன்னொருநாள், மடுவில் இறங்கிய யானையின் காலை முதலை பிடித்துக்கொள்ள, தடாகத்தில் உள்ள தாமரை மலர் ஒன்றைத் துதிக்கையால் எடுத்து 'ஆதிமூலமே!' என்று ஓலமிட்டு ஆனையானது அலறவும், அதனைக் காத்து இரட்சிக்கத் திருமாலை உடனே அனுப்பி வைத்தார் அனாதி மூலப் பெருமான்.

முதலையுண்ட பாலனை நினைந்து மனம் வருந்திய பெற்றோர்க்கிரங்கி, பிள்ளைதரச் சொல்லு காலனையே! என்று ஆரூரர் பாடவும் முதலையை வரவழைத்து பாலனையும் உயிருடன் அளித்து கண்ணுதற் பெருமான் பேரருள் புரிந்து முதலையையும் காத்து அருளினார்.

இவ்விதம் தனித்தனியே அதிகாரங்களைப் பிரித்து ஆட்சி புரிந்தாலும், தம்மை நாடிவரும் அடியவருக்கு அருளும் தனி அதிகாரத்தைமட்டும் தமக்கே உரிமையாகக் கொண்டுள்ளார். இருவினையும் நீக்கி இடையறா அன்பு செய்யும் ஆன்மாக்களுக்கு எல்லையற்ற திருவருளைப் பொழிந்து அழியாத இன்பவீட்டை அளிக்க வல்லவர் அவர் ஒருவரே.

இவ்வாறு அழியாத இன்பவீடு அளிக்க வல்லவன் வலஞ்சுழி இறைவன் என்னும் திருவுள்ளத்துடன் வாயாரப் புகழ்ந்து ஏத்தியும் பாடியும் வழிபட்டார் சம்பந்தர். அரனை வழிபடும் அரியதொரு பேறு பெற்றதை நினைந்து என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே! என்று ஆனந்த பரவசம் அடைந்தார். திருவருளால் தாளம் பெற்று தமிழ்மறை பாடிய சம்பந்தர் தலங்கள்தோறும் சென்று இன்னிசையுடன் பதிகம் பாடி இறைவனைத் தொழுதார். வாயாரப் புகழ்வதற்கு இயற்றமிழும் இன்னிசையோடு பாடி வழிபட இசைத்தமிழும் அவர்பால் ஒருங்கே அமைந்திருந்தன. இசையுடன் பாடி இறைவனை வழிபடும் ஆற்றலை அருளியுள்ள பெருமையை நினைந்து "இவ்வையகத்தில் முன்னம் நீ புரி நல்வினைப் பயனிடை என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே!" என்று மனத்தைத் தன்முன்னால், நிறுத்தி கேள்வி கேட்டு முற்பிறப்பில் செய்துள்ள புண்ணிய மிகுதியால் இவ்வரிய பேறு வாய்த்தது என்று வினாவிற்கு விடையும் அமைத்துக் காழி வேந்தர் அருளியுள்ள செய்யுள் கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியாகும்.

எனவே, "இறைவனை வழிபடுவதால் இன்ப வீடு கிடைக்கும்; இவ்வரிய பேறு முன்வினைப் பயனால் அமையும்; அரனை வழிபட்டு அனைவரும் உய்ய வேண்டும்" என்பது அருட்காழிப் பிள்ளையாரின் அருள் உபதேசம்.

இனி, அடியவர் சேர்க்கையால் வரும் பலனை அடுத்த பாட்டில் அறிவிக்கிறார். "திருவலஞ்சுழி இறைவனுக்கு உண்மைத் தொண்டு புரியும் தொண்டரோடு இனிது அமைந்திருந்தமையால் விண்டொழிந்தன நம்முடைய வல்வினை" என்று அருளியுள்ளார்.

"விண்டொழிந்தன நம்முடை வல்வினை விரிகடல் வருநஞ்சம்
உண்டிறைஞ்ச வானவர் தமைத்தாங்கிய இறைவனை உலகத்தில்

வண்டுவாழ் குழல் மங்கையொர் பங்கனை
வலஞ்சுழி இடமாகக்
கொண்ட நாதன்மெய்த் தொழில்புரி தொண்டரோடு
இனிதிருந் தமையாலே!"

பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறும். அதுபோல் அரன் வழிபாட்டில் சிறந்து விளங்கும் அடியவருடன் சேர்ந்தால் நமது வாழ்வும் மேன்மை அடையும். அதனால் நம்முடைய வல்வினை ஒழிந்துவிடும், என்றும் இன்பமாய் வாழலாம்.

"இருமையுங் கடந்து நின்றார் இவரை நீ அடைவாய்"

என்று ஆரூராருக்கு அடியவர் பெருமையைக் கூறி இறைவன் அருளிய திருவாக்கையும் இங்குக் கண்டு கொள்க.

திருமயிலையில், எலும்பு பெண்ணுருவாகத் தம் பெருமானைப் பணிந்து "மட்டிட்ட புன்னையங்கானல்" என்னும் பதிகம்பாடி உருத்திரபல்கணத்தார்க்கு அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்!" என்று வழிபட்டு இரங்கவும் பூம்பாவை உயிர் பெற்று எழுந்தாள். அந்தச் சந்தர்ப்பத்தில்,

"மண்ணினில் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்
கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவு கண்டார்தல்
உண்மையாம் எனில் உலகர் முன் வருகென உரைப்பார்"

என்று சம்பந்தர் அருளியதாகச் சேக்கிழார் அறிவிக்கிறார். இங்கேயும், அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல், கண்ணினால் இறைவன் திருவிழாவைக்கண்டு களித்தல் ஆகிய இரண்டுமே மண்ணினில் பிறந்தார் பெறும் பயன் என்று அருளியுள்ள குறிப்பையும் நாம் அறிந்துகொள்ள

வேண்டும். ஆகவே அரன் வழிபாடும் அடியவர் சேர்க்கையும் உயிர்க்கு உறுதி பயக்கும் சன்மார்க்கம் என்பதை உணர்ந்து அதன்வழி நின்று இன்பம் அடைவோமாக.

தமிழும் சைவமும் தழைத்தோங்கத் தமிழ்மறையளித்த சம்பந்தர் அவரது பாடலைப் பாடுவதால் ஏற்படும் பலனை ஒவ்வொரு பதிகத்திலும் இறுதிப் பாட்டில் விளக்கியுள்ளார். அதுபோலும் இப்பதிகத்தைப் பாடுவதாலும் கேட்பதாலும் வரும் நற்பலனை நமக்கு அறிவிக்கிறார்.

''மாதொர் கூறனை வலஞ்சுழி மருவிய மருந்தினை
வயற்காழி
நாதன் வேதியன் ஞானசம்பந்தன் வாய்நவிற்றிய
தமிழ்மாலை
யாதரித்திசை கற்றுவல்லார் சொலக் கேட்டுகந்தவர்
தம்மை
வாதியாவினை மறுமைக்கும் இம்மைக்கும் வருத்தம்
வந்தடையாவே!''

எளிய இனிய தமிழ் நடையில் இச்செய்யுள் அமைந்துள்ளது. மாதொரு பாகனை-வலஞ்சுழி மருவிய (அருவினை நோய்க்கு) மருந்தனைய இறைவனை வயற்காழி வேந்தன்—வேதியன்—ஞானசம்பந்தன் திருவாயால் புகழ்ந்து இயற்றிய தமிழ் மாலையை ஆதரித்து இசைகற்று வல்லார் சொலக் கேட்டு உகந்தவர் தம்மை வாதியாவினை; இம்மைக்கும் மறுமைக்கும் வருத்தம் வந்து அடையாது; என்றும் இன்பமே பெறலாம் என்பது இதன் பொருள்.

வினைப்பயன் ஒருவர் வாழ்க்கையை மிகவும் பாதிக்கும். கருமத்தை அனுபவித்தே தீரவேண்டும் என்று கவலைப்படுவார்கள். வேதப்பொருளை விளக்கும் சம்பந்தர் பாடலைப் பாடினால் வினைகள் பறந்துபோம், வாதியாவினை.

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

என்றபடி அருங்கருத்துக்கள் அடங்கிய அவரது பாடலை ஆதரித்து இசைகற்று வல்லார் சொலக்கேட்டு இன்புற்றால் இம்மைக்கும் மறுமைக்கும் வருத்தம் வந்து அடையாது. ஆகையால் நம் வாழ்வு சிறக்க ஞானசம்பந்தர் அருளிய தமிழ் வேதத்தை நாளும் படித்துக்கேட்டு நலம் பெறுவோமாக.

திருச்சிற்றம்பலம்

தவநெறி

மா. ப. தியாகராஜ முதலியார் B. A.,

பாடினை அருமறை வரன்முறையால்
ஆடினை காணமுன் அருவனத்திற்
சாடினை காலனைத் தயங்கொளிசேர்
நீறுவெண் பிறைமுடி நின்மலனே

நினையே யடியார் தொழநெடு மதிற்புகலிந்நகர்
தனையேயிட மேவினை தவநெறி அருளெமக்கே.

[3-ஆம் தி. மு]

தவம், தியானம், இடையறாது நினைத்தல் என்பனவெல்லாம் ஒரேவித சாதனையைக் குறிக்கும். பன்னிரண்டாண்டு தவம் கிடந்து நீர்மேல் நடக்கக் கற்றுக்கொண்டேன் என்று சொன்ன ஒரு சீடனைப் பார்த்து இராமகிருஷ்ண பரமஹம்சர் "மூன்று பைசா கொடுத்தால் இந்த வேலையை ஒரு படகு செய்துவிடுமே! இதற்காகப் பன்னிரண்டாண்டு கஷ்டப்படுவானேன்" என்று கேட்டாராம். அதுபோல் கண்ணால் பார்ப்பதைக் கண்ணை மூடிக்கொண்டு பார்க்கவோ அல்லது வெகு தொலைவில் நின்று காண முயல்வதோ தவமாகாது. கண்ணை மூடிக்கொண்டு தூங்கும் வேளையில் கனவில் அனேகக் காட்சிகளையும் உருவங்களையும் காண்கிறோம். ஆனால் அவையாவும் எண்ண அலைகளின் உருவங்களென விழித்

தெழுந்தபின் தெளிவுபடுத்திக் காண்கிறோம். விழிப்பு நிலையில் கண்களால் காண்பதையே உருவமென்கிறோம். இறைவன் அருவமானவர். அடியவர்களுக்கு உருவத்தில் காட்சியளித்துள்ளார். தமக்கென அவர் ஓர் உருவத்தை அமைத்துக்கொண்டு அதே கோலத்தில் அனைவருக்கும் காட்சியளிக்கவில்லை. யார் யார் எந்த எந்த உருவத்தில் நினைத்து வழிபடுகின்றனரோ அந்த அந்த உருவத்தில் அவரவர்களுக்கு அருள்பாலிக்கின்றார். எனவே அருவமாயுள்ள இறைவனை உருவத்தில் காண்டலே தவம்.

அருவத்தை அருவமாகவே காண முடியாது. கடவுள் பஞ்ச பூதங்களாகவும் விளங்குகின்றாரென நமது நால்வர் பரமாசாரியர்கள் பாடியுள்ளனர். திருஞான சம்பந்தர் பாடியுள்ள பாடல் வருமாறு :-

எளியாய் அரியாய் நிலம்நீ ரொடுதீ
வளிகாயமென வெளிமன்னியதூ
ஒளியாய் உனையே தொழுதுன் னுமவர்க்
களியாய் கழிப்பாலை யமர்ந்தவனே. —[2 தி. மு.]

பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி—திருவாசகம் அவற்றுள் மண், நீர், தீ ஆகிய மூன்றும் காணக் கூடியவை. காற்றும் ஆகாயமும் கண்ணால் காணக்கூடியவையல்ல. ஆனால் காற்றை நீராக மாற்றவும் நீரை ஆவியாக மாற்றவும் கூடும். அப்படி உருவமாயுள்ளதை அருவமாக்கவும் அருவத்தை உருவமாக்கிக் காணவும் கூடும்.

அதுபோல் இறைவனைக் காண வேண்டில் அவனுடைய அருவநிலையை உருவ நிலைக்கு மாற்ற வேண்டும். தண்ணீரை நீராவியாக்க அதைச் சூடுபண்ண வேண்டும். அதேபோல் அருவமாயுள்ள நீராவி குளிர்ந்த காற்று பட்டவுடன் மழையாகப் பெய்கிறது. எனவே அருவ நிலையினின்று உருவ நிலைக்குக்கொண்டு வரவோ அல்லது உருவநிலை அருவநிலைக்கு மாற்றப்படவோ சாதனைகள் செய்யவேண்டும். "சாதனமின்றி ஒன்றைச் சாதிப்பார் உலகிலில்லை" யென்பர் கைவல்ய நவநீத ஆசிரியர். இறைவன் ஐம்பூதங்கள்போன்று சடப்பொருளல்லன். எனவே தன் கருணையினால் அடியார்களுக்கு இறைவன் உருவத்தில் வந்து காட்சி அளிப்பான். அக்கருணை

யைப் பெற முயல்வதே சாதனையாகும். அதுவே சிவனுமாம். ஒரு பொருளினிடத்து அன்பு உண்டாக வேண்டுமானால் அதனோடு பழகல் வேண்டும். அருவ இறைவனோடு எப்படிப் பழக முடியும்? அவனை ஒரு உருவத்தில் நினைந்து நினைந்து பழகல் வேண்டும். ஒரு உருவத்தை நினைக்க நினைக்க அதை நேரில் காண விழைவோம். நேரில் காண இச்சை மிக மிக நினைக்கும் நினைப்புக்கோர் ஆற்றல் மிகும். நினைப்பின் ஆற்றல் அவ்வுருவத்தை அமைத்துவிடும். அதாவது அவ்வுருவத்தை நேரில் காணும் வகையில் தோற்றமளிக்கும், அப்படி நினைந்து நினைந்து, நினைப்பின் ஆற்றலைப் பெறுதலே தவமாகும்.

பட்டினத்தார் “தன்னப்பம் தன்னைச் சுடும் ஓட்டப்பம் வீட்டைச்சுடும்” என்று கூறினார். விஷங்கலந்த அப்பத்தைத் தந்த தம் தமக்கை வீடு பற்றி எரிந்தது. “முன் செய்த தீவினை இங்ஙனமே வந்து மூண்டதுவே” என்று எண்ணினார். தம்மை மாய்க்க நின்ற கழுமரம் பற்றி எரிந்தது. திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகள் சமணரிட்ட தீ பையவே சென்று பாண்டியற்காகவே என்று பாடினார். பாண்டியன் வெப்பு நோயால் துடித்தனன் அவர்களுடைய சொற்களுக்கு அவ்வளவு ஆற்றல் அமைந்திருந்தமைக்குக் காரணமென்ன? அவர்கள் அதற்கென செய்த சாதனை இறைவனை நினைந்து அவனுடைய நாமத்தை இடைவிடாது ஓதிப் பழகினதேயாகும். “நான் மறக்கினும் சொல்லுநா நமச்சிவாயவே” என்கிறார் சுந்தர மூர்த்தி சுவாமிகள். “உன் நாமம் என் நாவில் மறந்தறியேன்” என்று கூறுகிறார் அப்பரடிகள். “சிந்தை வாய்ப்பாயும் சிவபுரத்தரசே” என்கிறார் மாணிக்கவாசகர். “காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார்தமை நன்னெறிக்குய்ப்பது நாதன் நாமம் நமச்சிவாயவே” என்று திருஞானசம்பந்தர் பாடியுள்ளார். நினைக்க நினைக்கத்தான் காதல் பெருகும். காதல் பெருகக் கண்ணீர் மல்கும்,

இறைவன் இச்சாமாத்திரமாக ஜகத்தையே சிருஷ்டி செய்கிறான் என்று கூறுவர். நம் நினைப்பு இறைவன் நினைப்பாக மாறினால் அப்படிப்பட்ட ஆற்றலை நாமும் பெறலாமன்றோ? தூய எண்ணங்களே இறைவன் நினைப்பாகும். தூய எண்ணங்கள் ஆற்றலுடையனவாகும். தீய எண்ணங்களுக்கும் ஆற்றலுண்டெனினும் அவை அழிவுக்குக் காரணமாகும். தூய எண்ணங்கள் ஆக்கத்தை அடைவிக்கும் ஆற்றலமைந்

தனவாம். தூய எண்ணங்கள் அவ்வப்போது எவர்க்கும் உண்டாகும். ஆனால் அவை நீடித்து நிற்பதில்லை. இடையரு நல்நினைவே ஆற்றலுடையதாகும். நினைப்பும் மறப்பும் கலந்த நிலையே சகல கேவல நிலையென்பர். கேவல நிலை நீங்கி சகல நிலையிலிருப்பதே தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுவ தென்பர்.

உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பதுபோலும் பிறப்பு

என்று கூறுவர் திருவள்ளுவர். மறதி நிலை நீங்கி இருத்தலே இறவா நிலையாகும்.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார்

எனவே இறைவனடி சேராதார் கேவல நிலையை விட்டகல முடியாது. கேவலநிலை அகல வேண்டிடில் இறைவனை ஒரு உருவத்தில் நினைந்து நினைந்து பழக வேண்டும். இறைவனடி சேர்தலாவது அவனை இடைவிடாது நினைத்தலேயாகும். சாதாரண உருவத்தை முற்றும் காண முடிகிறதா? என்று நோக்குமிடத்து சிறிய உருவங்களை முற்றுங் காணலாம். ஓரடிக்கு மேற்பட்ட நீள அகலமுள்ள உருவத்தை முற்றும் ஒரே சமயத்தில் காண முடியாது. எனவே இறைவனுடைய உருவத்தைப் பாதாதி கேசம் கேசாதிபாதமாக நோக்கி நோக்கிப் பழக வேண்டும். அதற்காகக் கோயில்களில் கற்பூரம் ஏற்றி தலையினின்று கால்வரையிலும் பாதத்தினின்று சிரசு வரையிலும் மேலும் கீழுமாக விக்கிரக ஆராதனை செய்வதைக் காணலாம். இறைவனுடைய உருவத்தை முற்றும் காணப் பழகுவதற்கு அவ்வாறு ஆராதனை செய்யும் சமயங்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அப்படி நம் நினைவை ஈடுபடுத்தும் மூர்த்தியை இஷ்ட மூர்த்தியெனக் கொள்கிறோம். சமரச பாவனையில் எல்லா மூர்த்தங்களும் ஒன்றேயானாலும் இஷ்டமூர்த்தியைச் சிறப்பாக வழிபடல் வேண்டும். ஏனைய மூர்த்தங்களை வழிபடக் கூடாது என்ற தன் நோக்கம் இஷ்டமூர்த்தியின் நினைப்பு நீங்காதிருக்க வேண்டுமென்பதேயாகும். அவ்வாறு முற்றும் இடைவிடாது நினைக்கப்பழகிவிடுவோமானால் நாம் நினைக்கும் உருவமே தன்னுடைய வியாபக நிலையை—விசுவருபத்தைக் காட்ட அமைந்துவிடும்.

"இருமையில் ஒருமையும் ஒருமையின் பெருமையும் மருவிலா மறையோர் கழுமல முதுமதிக் கவுணியன் கட்டுரை கவுணியன் அறியும் அனைய தன்மையதாதலின் நின்னை நினைய வல்லாரில்லை நீள் நிலத்தே" என்றார் திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகள். ஒருமையின் பெருமையை உணர்ந்த மருவிலா ஞானசம்பந்தன் போன்றவர்கள் நினைக்கும் அவ்வுருவத் திருமேனியை ஏனையோர் நினைக்க முடியாது. அப்படிப் பட்ட அருவுருவத் திருமேனியை ஓர் உருவத்திலமைத்து நினைந்து நினைந்து பழகி நம்மில் ஒருவராயுள்ள மூர்த்தியை நம்மில் வேறாயுள்ள உருவத்தில் இருவராகக் கண்டு அந்த இருமையிலுள்ள ஒருமையின் பெருமையை உணர்வதற்கு உள்ளம் தூய்மைப்பட வேண்டும்,

அவ்வாறு உள்ளத்தூய்மையினால் நினைப்பின் ஆற்றலை மிகப்பழகி, ஒலியின் வடிவம் சொற்களாவது போன்று ஒளியின் வடிவம் இறை உருவங்களாகக் காட்சியளித்தபோதிலும், அதைக் காணும் சக்தி வேண்டும். அவ்வொளி உருவத்தைக் காண நமக்கு இந்திரியம் அமைய வேண்டும். அதுவே நெற்றிக்கண் என்பர் சித்தர்கள். நுதல் விழி பெற்றாலன்றி நுண்ணிய ஒளிவுருவத்தைக் காண முடியாது. திருஞான சம்பந்தர் தாம் கண்ட உருவத்தைச் சுட்டிக்காட்டியும் அவருடைய தகப்பனார் அவ்வுருவத்தைக் காண முடியவில்லை. சிவபெருமான் ஒருவர்க்கே நுதல்விழி உண்டு. நுதல் விழி பெற்ற அவரே நமக்கு நுதல் விழி தருதல் வேண்டும். ஏனைய மூர்த்தங்கள் நுதல் விழியற்றவை. அவைகளை வழிபடின் அருவமாயுள்ள இறைவனை ஒளி உருவத்தில் காண முடியாது.

சைவ சமய பரமாசாரியர்களாகிய நால்வர் நினைப்பின் ஆற்றலையும், சொல்லாற்றலையும், இறைவனைக் கண்டு அருள் பெறும் ஆற்றலையும் பெற்றிருந்தனர். அவர்கள் பாடிப் போந்துள்ள அருட்பாடல்களாகிய தேவார திருவாசகங்களை ஓதுவதினால் சொற்றூய்மையேற்படும். சொற்றூய்மையினால் தூய வாழ்வு அமையும். திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் புனித வாய் மலர்ந்தருளிய பாடல்களைப்போல் எந்தச் சமயத்திலும் காண முடியாது. அவற்றை ஓதினாலன்றி உள்ளத் தூய்மையும் சொற்றூய்மையும் பெறலரிது. பொய் மொழியையும் பயனில் சொற்களையும் பேசும் மக்கள் வாக்குத் தூய்மைப்பட வழிதான் என்ன? புனித வாய் மலர்ந்தருளிய அருட் பாடல்களைப் படித்துப் படித்து வாக்குத் தூய்மைப்பட வேண்டும்;

வாக்குத் தூய்மைப் படாவிடின் வாழ்க்கை எப்படி தூய்மைப் படும். ஒரு உருவத்தை உருவாக்க நம் எண்ணம் ஆற்ற லுடையதாக அமைய வேண்டுமெனின் வாக்கு தூய்மைப்பட வேண்டும். அவ்வாறு தூய்மைப் படுதலே தவம். எனவே திருக்களர்பதிகத்தில் திருஞானசம்பந்தர்,

இந்துவந்தெழு மாடவீதியெ
ழில்கொள் காழிந்நகர் கவுணியன்
செந்துநேர் மொழியாரவர் சேருந்திருக்களருள்
அந்தியன்னதொர் மேனியானே
அமரர்தம் பெருமானே ஞானசம்
பந்தன் சொல்லிவை பத்தும் பாடத் தவமாமே

என்று குறிப்பிடுவதைக்கண்டு தவநெறியை யாவரும் தலைப் பட முயல்வார்களாக.

பொன் மொழிகள்

அனுபவங்களின் ஒற்றுமை

கொ. நீ. சி.

டாக்டர் W. R. இன்ஞ் என்னும் மேல்நாட்டு அறிஞர் "கிருத்துவ அனுபூதி நெறி" என்னும பொருள் பற்றி ஆற்றிய சொற்பொழிவுகளில் பின்வரும் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார் :—

"எந்த மதத்தைச் சார்ந்தவர்களாயிருந்தாலும், எல்லா அனுபூதிமான்களும் கூறும் அனுபவங்கள் ஒத்திருப்பதைக் காணலாம். கடவுள் ஓர் ஆன்மீக அருவப் பொருள் என்பதும், அதோடு மனித ஆனமா தொடர்புகொள்ள முடியும் என்பதும், அப்பரம்பொருள் எல்லாவித நன்மைக்கும், உண்

லைக்கும், அழகுக்கும் உறைவிடம் என்பதும், அவருடைய அடிச்சுவட்டை இயற்கையில் எங்கும் எதிலும் பார்க்கலாம் என்பதும், அவர் நமக்குள்ளே உயிருக்கு உயிராய் இருப்பதை உணரலாம் என்பதும், ஆகையால் நாம் உயிரின் அடித்தளத்தை அணுக அணுக இறைவனையே நெருங்குகிறோம் என்பதும் எல்லா அனுபூதிமான்களும் கூறும் கூற்று. இவ்வுண்மைகள் அறிவுகொண்டு ஆராய்ந்து அடைந்த முடிவுகள் அல்ல என்றும் அனுபவப் பூர்வமாகப் பெற்ற முடிவுகள் என்றும் அவர்கள் கூறுகிறார்கள். மேலும் அவர்கள் கூறுவதாவது :—

நம்மை இறைவனிடத்திலிருந்தும் பேரின்பத்திலிருந்தும் பிரிப்பது முதலாவது பல்வேறு வடிவங்களெடுக்கும் சுயநல மனப்போக்கு; இரண்டாவது பல்வேறு வகையான புலனுணர்ச்சியில் வேட்கை. இவை இறைவனிடம் சேர்க்க ஒட்டாத இருளும் இறப்பும் சேர்ந்த வழிகள். ஆனால் நேர்மையுடையவர்களின் வழி ஒளி நிறைந்தது. இவ்வொளி பெருகிப் பெருகி நண்பகலாவது திண்ணம்.

இதிலிருந்து நாம் அறிந்துகொள்வது :—சமய வாழ்க்கைக்கு அடிப்படைத் தேவை, சுயநலமின்மையும் புலனுணர்ச்சியை மட்டுப் படுத்தலும் ஆம். இது எல்லாச் சமயத்தார்க்கும் ஒப்ப முடிந்த உண்மை. இவ்வடித்தளமின்றிச் சமய ஆரவாரத்தை மேற்கொள்ளுதல் அல்லது சமய அனுபவத்தை அவாவுதல் நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வதும் மற்றவர்களை ஏமாற்றுவதும் ஆம்.

காழிக் கண்ணுடைய வள்ளலார்

(அம்பை சங்கரனூர்)

நம் தமிழகம் கொடைவள்ளல்கள் பலரைக் கொண்டிருந்த பேருமை மிகு நாடு என்பது தேற்றம். அவ்வள்ளல்கள் இருவகையினர் ஆவர். ஊனுடம்பைக் காக்கப் பொருளாதியவற்றை உதவியவரைப்பற்றியே நம் சங்க இலக்கியங்களில் பரக்கக் காணலாம். உயிரைக் காக்க உதவிய மெய்ஞ்ஞான வள்ளல்கள் பலரும் இப் புண்ணிய பூமியில் உதித்துப் பல அருநூல்களை அருளியும் நேரே உபதேசித்தும் மக்களை மேம்படச் செய்தனர் என்பது ஒருதலை. அவர்களுள் தலையிடத்தைப் பெற்றவரே காழிக்கண்ணுடைய வள்ளலாராவர். இவர் சீர்காழித் திருப்பதியில் நெடுநாள் வாழ்ந்தவர் என்பது அவர் பெயரோடமைந்த அடையைக் கொண்டே அறியலாம். சீர் காழித் திருப்பதி வரன்முறையாகப் பல பெரியார்களைத் தோற்றுவித்தும் தன்பால் வதியச் செய்தும் அவர்கள் மூலமாகப் பல அருணூல்களை உலகுக்குபகரிக்கச் செய்த பெருமை மிக்கது.

துகளறு போதம் அருளிய சிற்றம்பல நாடிகள் சீர்காழிப் பகுதியினரேயாவர். அவர் மாணவ குழாங்கள் அறுபத்து மூவருள் சீர்காழிச் சம்பந்த பண்டாரம் என்னும் பெயரிய பெரியார் ஒருவரும் தலையிடத்தைப் பெற்றிருந்தார். இவரே "சிவானந்த மாலை" என்னும் அருமை மிகு நூலை இயற்றியவராவர். இவரைச் சம்பந்த முனிவர் திருஞான சம்பந்தன், சீகாழி நாடன், கண்ணுடைச் சம்பந்தன், வள்ளல் குருராயன் வாது வென்ற சம்பந்தன் எனவும் பலவாறு கூறுவர்.

இவர் சீடர்களுள் ஒருவரே சம்பந்த சரணாலயர் என்னும் ஞானியார் ஆவர். இப்பெரியார் திருவதிகையிலிருந்து சீர்காழிக்கு ஞானவேட்கை மிகுதியான் வந்த

வர் என்று தெரிகிறது. சீர்காழிப் பதி திருஞான சம்பந்தர் அவதரித்தருளிய திருத்தலமாதலாலும் அப்பெருமானிடத்து மிகவும் ஈடுபாடு கொண்டவராதலாலும் இவர் தம் வழிபடு கடவுளாக அவரையே கொண்டாரென்று கூறினும் மிகையாகாது. இப்பெரியார் சம்பந்த முனிவர் திருவடித் தொண்டராயிருந்து ஞானவிளக்கம் பெற்றார். இவர் தத்துவ விளக்கம் என்னும் நூலை முதலில் எழுதினார். பின்னரே ஒழிவிலொடுக்கம், பஞ்சாக்கர மாலை, ஞானசாரம், நியதிப் பயன், மாயாப்பிரலாபம், பஞ்சமலக் கழற்றி முதலிய அருணூல்களைச் செய்ததாகத் தெரிகிறது.

இவரே பிற்காலத்துக் காழிக்கண்ணுடைய வள்ளல் எனும் பெயரைப் பெற்றார். இவர் சீர்காழியிலே ஒரு மடத்தை நிறுவி ஞான பரம்பரையை வளர்த்து வந்த பெருமை மிக்கவர். அம்மடத்திற்குக் குகமடம் என்பது பெயராகும். இம்மடத்துப் பரம்பரையினர் மேற்கொண்ட பத்ததிக்குக் குகபத்ததி என்பது பெயராகும். இப் பெருமானைப் பல பெருமக்களும் போற்றியுள்ளனர். அவற்றிலிருந்து இவருக்கு அதிகைக்கு அதிபர், காழிமூதூரார், குகமடத் தலைவர் முதலிய பல பெயர்கள் காணக்கிடைக்கின்றன. இவருடைய சீடர்கள் பலர் பல அருமையான நூல்களையும் அருளிச் செயதுள்ளார்கள்.

இத்தகைய அருமையான பரம்பரையின் இன்றுள்ள நிலையை ஓர்ந்து பார்க்கின் அது மிகவும் வருந்தத்தக்க தொன்றாகும். குக மடமோ குகபத்ததியோ விளக்கம் பெறாமல் போனது சைவ மக்களின் தவக்குறைவே

யாகும். நம் தமிழக ஞான நிலையங்கள் இவ்வாறு கேடுறாது நீடித்திருக்கச் செய்ய சைவப் பெருமக்கள் மிகவும் கண்காணிப்பாயிருக்க வேண்டும்.

அண்மைக் காலத்தில் வாழ்ந்த இப்பெருமகனாரைப் பற்றியே பல உண்மைகள் இன்னும் அறியக் கூடவில்லை. இக்கட்டுரையில் கண்டவைபோக வேறு சிறப்பியல்புகள் காழிக்கண்ணுடைய வள்ளலார் பற்றித் தெரியக் கூடியவையாயிருக்குமாயின் அன்பர்கள் தெரிவித்தால் நம் சித்தாந்தம் மூலம் வெளியிட்டுதவலாம். இவ்வாறு நம் தமிழக ஞானப் பெரியார்கள் பலரைப் பற்றி விளக்கமாக எழுதியுதவின் நலம். அன்பர்கள் சிந்தித்து ஆவன செய்வார்களாக.

நம் சமாஜத் துணைச் செயலாளர் திரு. மு. நாராயணசாமி முதலியார் அவர்கள் பேரர்கள் செல்வர்கள் விசாகமணி கார்த்திகேயன், சக்தி வடிவேலனுக்கும் பேர்த்தி செல்வி சண்முக சுந்தரிக்கும் தோடணி சிறப்பு விழா 5-9-68 அன்று நிகழ்ந்தது. தோடுடை செவியனருளால் குழந்தைகள் எல்லா நலங்களும் இனிது பெற்று நீடுவாழ அப்பெருமானருளை வணங்கி வாழ்த்துகிறோம்.